**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**MCOP . No.866 /2022 and 867/2022**
**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்குமார் |
| Father's Name | : | காசி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.10.2025

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் 3ம் நபர். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் உண்மை என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று உறுதியிட்டு கூறுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கார்ணாம்பூண்டி கிராமத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். நான் குடியிருக்கும் கார்ணாம்பூண்டிக்கும் விபத்து ஏற்பட்ட டோல்கேட்டுக்கும் இடையே 18 கிமீ தூரம் இருக்கும். விபத்து நடந்த இடத்தில் எனக்கு என்ன வேலை என்று கேட்டால் நான் நார்த்தாம்பூண்டிக்கு சென்று வந்துகொண்டிருந்தேன். நான் நார்த்தாம்பூண்டியில் இருந்து மதியம் 2.00 மணிக்கு புறப்பட்டேன். நான் துர்கைநம்மியந்தல் கூட்ரோடுக்கு வரும்போது சுமார் 2.45 மணி இருக்கும். நேரத்தை பார்ப்பதற்கு நான் செல்போன் வைத்திருந்தேன். விபத்து நடந்த டோல்கேட்டுக்கு முன்பும் பின்பும் வேகத்தடை உள்ளது என்றால் இல்லை. டோல்கேட் திறப்பதற்கு முன்பே வேகத்தடை கட்டப்பட்டது என்றும் நான் தவறாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் டோல்கேட் திறக்கப்படவில்லை. டோல்கேட் கட்டணம் வசூல் செய்யும் பெட்டிகளை வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் வேகத்தை குறைத்துதான் எந்த வாகனமும் செல்ல முடியும் என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேறு வாகனங்கள் எதுவும் அதிகமாக செல்லவில்லை. நான் லாரிக்கு முன்னால் லாரியை பார்த்தவாறு இருந்தேன். நான் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தேன். டோல்கேட்டிலிருந்து நான் சுமார் 10 - 15 அடி

தூரத்தில் இருந்தேன். டோல்கேட்டிலிருந்து வாகனங்கள் மேற்கு வழிகாய வடக்கு பக்கம் செல்ல வேண்டும். நான் வடக்கிலிருந்து தெற்கு வருவதற்கு கிழக்கு பக்கமாக வரவேண்டும் என்றால் சரிதான். அதனால் நான் " டமால் " என்று சத்தம் கேட்ட பிறகுதான் எதிர்திசையை நோக்கி பார்த்தேன் என்றால் நான் விபத்து நடந்ததை நேராக பார்த்தேன். இரு சக்கர வாகனம் லாரியின் குறுக்கே சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டியவரின் தவறால்தான் விபத்து ஏறப்ட்டது என்றால் சரியல்ல. அவர் நேராகதான் போய்கொண்டிருந்தார். நான் விபத்து சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். நீதிமன்றத்தில் நான் இதுவரை சாட்சி சொல்லவில்லை. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை. மனுதாரர் பாக்கியம் கேட்டுக்கொண்டதன் பேரில் வந்தேன். நான் விபத்தை நேரடியாக பார்க்காமல் மனுதாரர் எங்கள் ஊரை சேர்ந்த உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.